முருகப்பெருமான் துணை

**மகான் மதுரகவி ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.11.2023, வெள்ளிக்கிழமை

1. ஓங்கார ஞான சொரூபமே
ஓங்கார ஞான வடிவே
ஓங்கார ஞான பலமே
ஓங்கார ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது தேள்திங்கள்
வரங்களென அட்டமதிகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 08ம் நாள், 24.11.2023, வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை மதுரகவி ஆழ்வாரும்
அருளுவேன் உலகநலம் பெற
பேசிடவே மேலவர்கள் எனும்
பேதம் கடந்த ஞான சமூகம்
4. சமூகம் படைக்கும் சக்தியாக
சற்குருவாய் அரங்கன் அருள
நேமமுடன் அரங்கன் திருவடி
நிலமதனில் பணிந்து வர
5. வருகவே மக்களிடை தெளிவு
வள்ளல் தன்மை குறையா
தருமசிந்தை ஞானபலம் கூடிட
தரணியோர் அரங்கனால் மாற்றம்
6. மாற்றம்பல கண்டு சிறப்பர்
மகான்கள் பேரிலான செபதபம்
ஆற்றல்பட செய்து வருகவே
அன்னதானம் செய்கின்ற சக்தியும்

7. சக்திமிகு தவபலம் ஒப்பான
சற்குருவின் ஆசியும் துணையும்கூடி
சக்திமிக்க ஞானவான்களாவர்
சரணாகதி குருவழி கண்டுவர
8. வருகவே வருங்காலம் உணரும்
வல்லமையும் உலகை மாற்றும்
தருமபலமும் தண்டாயுதப் பெருமான்
தரிசனமும் தக்க துணையும் கிட்டி
9. கிட்டியே எங்கும் எதிலும்
குருபரன் சக்தி வெளிப்பட
கட்டம் அனைத்தும் வென்று
கலியின் சிக்கலையும் கடந்து
10. கடந்துமே மனிதர்களை தேற்றி
கருணை மிக்க ஞானவாழ்வு
தடையற உலகோர்க்கு அருளி
தவதரும ஞானபலம் கூடிய
11. கூடிய ஞானயுகம் படைப்பர்
குறைவிலா ஞான ஆட்சிதனை
நாடெங்கும் அமைத்து சிறப்பர்
ஞானிகளாய் சிறந்து நிற்பர்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–